கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும்
நீர்ப்பாசன அமைச்சு

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## ஒருங்கிணைந்த நீரேந்து பிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவத் திட்டம் (IWWRMP)

IWWRMP

**Project No: P166865 Loan No: IDA-6621-LK**

1. ஒருங்கிணைந்த நீரேந்து பிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவத் திட்டத்தின் (IWWRMP) செலவை நோக்கி சர்வதேச அபிவிருத்தி சம்மேளனத்திடம் (உலக வங்கி) இருந்து நிதிக்கா இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம் விண்ணப்பித்திருப்பதோடு கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்ட ஒப்பந்தத்தின் கீழான கொடுப்பனவுகளுக்கு இந்த கடனின் பகுதியை செயற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. ஒருங்கிணைந்த நீரேந்து பிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவத் திட்டத்தின் திட்ட பெறுகைக் குழு, தலைவரின் சார்பில் அட்டவணை 01 தரப்பட்டுள்ளவாறு பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து IWWRM திட்டத்தின் திட்டப் பணிப்பாளரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**அட்டவணை 01**

| இல. | வேலை விபரம் | தேவையான அனுபவம்/ தகைமை | விலைமனு பிணை செல்லுபடிக் காலம் | நிர்மாண வேலைகளின் சராசரி ஆண்டு பெறுமதி மற்றும் திரவச் சொத்து மற்றும்/ அல்லது கடன் வசதிகளின் குறைந்தபட்ச தொகை (ரூபா) |
|---|---|---|---|---|
| 1 | முல்லைத்தீவு பகுதி, முதுயன்காடு பிரிவில் முதுயன்காடு திட்டத்தில் பாதை 02, **FC 15** கால்வாய் மேம்பாடு – மீள் கேள்விமனு- LK-MOMDE-557535-CW-RFB (ஒப்பந்தக் காலம்: 180 நாட்கள்) | CIDA தரம்: C8 அல்லது அதற்கு மேல்<br>சிறப்பு: நீர்ப்பாசனம் மற்றும் வடிகாலமைப்பு கால்வாய் வெற்றிகரமான விலைமனுதாரர் செல்லுபடியான CIDA பதிவை பெற்றிருத்தல் வேண்டும் | விலைமனு பிணை பெறுமதி: ரூபா 80,000.00 செல்லுபடி (105 நாட்கள்) 08.10.2026 அன்று வரை | 9.63 மில். மற்றும் 2.01 மில். |
| 2 | புவியியல் உப திணைக்களத்தின் இயந்திரத்திற்காக உதிரிப் பாகங்களின் பெறுகை மற்றும் வழங்கல் - மீள் கேள்விமனு LK-MoMDE-556491-GO-RFB. (ஒப்பந்தக் காலம்: 180 நாட்கள்) | (a) விலைமனுதாரர் 10 ஆண்டுகள் இந்த வர்த்தகத்தில் ஈடுபட்டிருத்தல் வேண்டும் என்பதோடு கடந்த 5 ஆண்டுகளில் குறைந்தது 3 இதனையொத்த திட்டங்களை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.<br>(b) வாடிக்கையாளர் விபரங்கள் மற்றும் உறுதி செய்யப்பட்ட பூர்த்தி செய்த அறிக்கைகளுடன் ஆவணங்கள்/ அத்தாட்சியை சமர்ப்பித்தல் வேண்டும்.<br>(c) வெளிநாட்டு/ அரச நிறுவனங்களுடனான வேலை அனுபவத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.<br>(d) பிரிவு 37.2 இன் தேவைகளுடன் தொழில்நுட்ப ஊழியர் மற்றும் ஏனைய தேவைகளுக்கு இணங்குதல் வேண்டும். | விலைமனு பிணை பெறுமதி: ரூபா 2,445,000.00<br>செல்லுபடி (147 நாட்கள்) 01.12.2026 அன்று வரை | பொருந்தாது |

3. ஒப்பந்தம் வழங்குவதற்கான தகுதிக்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் விலைமனு ஆவணத்தில் உள்ள தேவைகளை பூர்த்தி செய்தவராகவும் இருத்தல் வேண்டும்.
4. பரீட்சிப்பதற்காக விலைமனு ஆவணங்கள் https://www.iwwrmp.lk/web/procurement/section/procurement-notices என்ற இணையதளத்தில் குறிப்புக்காக கிடைக்கப்பெறும்.
5. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் கொழும்பு-07, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை, இல. 96, மகாவலி மத்திய கட்டிடம், 2ஆவது மாடி, IWWRM திட்ட, சிரேஷ்ட திட்ட நிபுணரிடம் (பெறுகை மற்றும் ஒப்பந்தங்கள்) இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் என்பதோடு முன் அறிவித்தல் மூலம் வேலை நாட்களில் மேல் தரப்பட்டுள்ள அதே முகவரியில் விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும். அட்டவணை 2 இன்படி (தொடர்பு இல.: 0112691163).
6. விலைமனு ஆவணங்களின் தொகுதி ஒன்றுக்காக மேற் தரப்பட்டவாறு (தொகைக்காக அட்டவணை 02 ஐ பார்க்கவும்) மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணம் ஒன்றை ரொக்கப்பணத்தில் செலுத்தி அல்லது இலங்கை வங்கி, ஹைட் பார்க் கிளையில் 7042633 என்ற ஒருங்கிணைந்த நீரேந்து பிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவத் திட்டத்தின் வங்கிக் கணக்கு இலக்கத்திற்கு மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணத்தைச் செலுத்தியதன் வங்கிக் கொடுப்பனவு ரசீதின் ஸ்கேன் செய்யப்பட்ட பிரதியுடன் iwwrmp@slnet.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு கோரிக்கை கடிதம் ஒன்றை அனுப்பி முன் அறிவித்தல் மூலம் (தொடர்பு இல.: 011-2691163) வேலை நாட்களில் மாத்திரம் ஆனந்த குமாரசுவாமி மாவத்தை, இல. 96, மகாவலி மத்திய கட்டிடம், 2ஆவது மாடி, IWWRM திட்டத்தின் திட்டப் பணிப்பாளருக்கு நிறுவனம்/ அமைப்பின் முகவரி அச்சிடப்பட்ட கடிதத் தாளில் கோரிக்கை கடிதம் ஒன்றை சமர்ப்பித்து எதிர்பார்ப்புடைய விலைமனுதாரர்களால் விலைமனு ஆவணங்களை பெற முடியும்.
7. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு மற்றும் தளப் பயணம் அட்டவணை 02 இல் குறிப்பிடப்பட்டவாறு கொழும்பு 07, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை, இல. 96, மகாவலி மத்திய கட்டிடம், 2ஆவது மாடி, IWWRM, PMU மாநாட்டு அறையில் நடத்தப்படும். குறித்த அதிகாரியின் உதவியுடன் தளங்களை பரீட்சிப்பதற்கு விலைமனுதாரர்கள் கோரப்படுகின்றனர்.

**அட்டவணை 02**

| இல. | ஒப்பந்த இல. | மீளளிக்கப் படாத வைப்பு | தளப் பயணம் | விபரம் மற்றும் விலைமனு ஆவண கோரிக்கை | விலை மனுவுக்கு முந்திய சந்திப்பு | விலைமனு மூடப்படுவது மற்றும் திறப்பது (திகதி மற்றும் நேரம்) |
|---|---|---|---|---|---|---|
| 1 | LK-MOMDE-557535-CW-RFB | ரூபா 3500.00 | திகதி: 17.06.2026<br>நேரம்: மு.ப. 10.00<br>இடம்:<br>பிரதி நீர்ப்பாசன பணிப்பாளர் முல்லைத்தீவு பகுதி, ஏ-9 வீதி மாங்குளம், முல்லைத்தீவு | 15.06.2026 தொடக்கம் 24.06.2026 வரை 9.30 மணி தொடக்கம் 15.00 மணி வரை | திகதி: 18.06.2026 நேரம்: மு.ப. 10.00 | திகதி: 25.06.2026 நேரம்: பி.ப. 2.00 |
| 2 | LK-MoMDE-556491-GO-RFB. | ரூபா 30,000.00 | பொருந்தாது | 06.07.2026 தொடக்கம் 24.06.2026 வரை 9.30 மணி தொடக்கம் 15.00 மணி வரை | திகதி: 25.06.2026 நேரம்: மு.ப. 10.30 | திகதி: 07.07.2026 நேரம்: பி.ப. 2.00 |

8. விலைமனு ஆவணங்களின் அனைத்துப் பக்கங்களிலும் விலைமனுதாரர் கையெழுத்திட்டு தமது முத்திரையை இடுதல் வேண்டும்.
9. இரு பிரதிகளுடனான முழுமையான முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுவைக் கொண்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ஒப்பந்தப் பெயர் மற்றும் இலக்கத்தை தெளிவாகக் குறிப்பிட்டு அட்டவணை 02 இல் குறிப்பிடப்பட்டவாறு திட்டப் பணிப்பாளர், IWWRM திட்டம், 2ஆவது மாடி, மகாவலி மத்திய கட்டிடம், இல. 96, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை, கொழும்பு 07 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது கைகளால் சேர்த்தல் அல்லது விரைதூதர் மூலம் அனுப்புதல் வேண்டும். அதன் பின்னர் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். இரண்டுக்கு (02) மேற்படாத எண்ணிக்கையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் சந்தர்ப்பத்தில் பங்கேற்க அனுமதிக்கப்படுவர்.

**திட்டப் பணிப்பாளர்,**
**ஒருங்கிணைந்த நீரேந்து பிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவத் திட்டம்**
**2ஆவது மாடி, மகாவலி மத்திய கட்டிடம்,**
**இல. 96, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை,**
**கொழும்பு 07.**
**2026.06.14**